# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

## பேச்சுப் போட்டி 2022

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 6

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

இங்கு நடுநிலைத் தீர்ப்புக் கூற வந்திருக்கும்
நடுநிலையாளர்களே, மற்றும் சபையோரே
உங்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கம் !

நான் பேச எடுத்துக்கொண்ட தலைப்பு

## கல்வி அழகே அழகு

அழகுக்கு அழகூட்ட நாம் பலவிதமான வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்கின்றோம். ஆனால் கற்றறிந்தவர்கள் முன்பு அதுவெல்லாம் கால்த்தூசிக்குச் சமமே. இதனாற்தான் நாலடியார், “குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் எனும் நடுவு நிலைமையால்
கல்வியழகே அழகு” என்று கூறுகின்றார்.



திருவள்ளுவர் தமது திருக்குறளில் கூறும்போது
“தொட்டனைத் தூறும் மணற்கேணி
மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு”
அத்துடன்
“கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக” என்று கல்வியின் சிறப்பை நமக்கு வலியுறுத்துகின்றார்.

ஒருவனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் திறனைக் கல்வி வழங்குவதோடு அன்புடனும், பண்புடனும் வாழ வழிகாட்டி நிற்கின்றது. “அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு”, “கற்றவனுக்குச் செல்லும் இடமெல்லாம் சிறப்பு”, “எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”. எனவே நாம் இன்றே படிப்போம். நன்றே படிப்போம் வென்றே காட்டுவோம் எனக்கூறி எனது உரையை முடிக்கின்றேன்.

நன்றி வணக்கம்.


ஆக்கம்: ஆசிரியர் திரு. எல்விஸ் எமிலியானுஸ்.
ஆசிரியர் செல்வி. மேரி ஜெனட் எல்விஸ்.